DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. - 151/2024

Prosecution PW - 27

| | | |
|---|---|---|
| Name | திரு. நடராஜன் | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 03.04.2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A10 Present.

<u>முதல் விசாரணை</u>

நான் அய்யம்பேட்டை காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.04.2024 ம் தேதி இவ்வழக்கின் சாட்சிகள் செந்தில்குமார், பிரவீன் குமார், ரமேஷ் ஆகியோர்களிடம் குவிமுச பிரிவு 164 (5) கீழ் வாக்குமூலம் பதிவு செய்ய தஞ்சாவூர் நீதிதுறை நடுவர் எண் 3 ல் ஆஜர் செய்து வாக்குமூலம் பதிவு செய்ய உதவியாக இருந்தேன். பின்னர் 02.05.2024 ம் தேதி இவ்வழக்கின் தடயபொருட்களை தஞ்சாவூர் நீதிதுறை நடுவர் எண் 3 ல் ஒப்படைத்து சிபி நம்பர் 24/2024 பெற்று நிலையம் வந்து அறிக்கை செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்</u>

இல்லை

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு

என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. - 151/2024

Prosecution PW - 28

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. மோகன் | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 03.04.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A10 Present.

<u>முதல் விசாரணை</u>

நான் அய்யம்பேட்டை காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.04.2024 ம் தேதி இவ்வழக்கில் இறந்துபோன ஜெயகுமார் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி ஆய்வாளர் கொடுதத வேண்டுகோள் கடிதத்தை மருத்துவரிடம் சமர்பித்து பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனையின் போது உடன் இருந்து பிரேதத்தின் மீது இருந்த இரத்த கறைபடிந்த சந்தனகலர் சட்டை, இரத்த கறை படிந்த காவி நிற வேட்டி,இரத்த கறை படிந்த நீல நிற ஜட்டி ஒன்று ஆகியவற்றை பெற்று தனி அறிக்கை மூலம் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். அந்த தனி அறிக்கை அதசாஆ **22**. இரத்த கறைபடிந்த சந்தனகலர் சட்டை சா.பொ **6**. இரத்த கறை படிந்த காவி நிற வேட்டி சா.பொ **7**, இரத்த கறை படிந்த நீல நிற ஜட்டி ஒன்று சா.பொ **8.** பின்னர் சடலத்திலிருந்து எடுக்கபட்ட உடல் உள்ளுறுப்புகளை இரசாயன பகுப்பாய்வு செய்ய வேண்டி மருத்துவரின் வேண்டுகோளுக்கு இணங்க மருத்துவமனையில் பெற்று தஞ்சாவூர் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

இல்லை

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு

என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்